**விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2021**

---

## 1. நிதிககூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இடர் கடன் மற்றும் கணனிக் கடன் ரூபா 112,988 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | இத்தொகை இதுவரை விடுவிக்கப்படாத, பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து எதிர் காலத்தில் தீர்வு செய்வதற்கும் மீளளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் முன்னைய ஆண்டு வரை 1,794 மாணவர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 30,140,292 ஆன நிலுவை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 இல் காணப்பட்ட கொவிட் - 19 தொற்று நிலைமையின் கீழ் கல்வி செயற்பாடுகள் முறையாக இடம்பெறாமை பல மாதங்கள் நாடு முழுமையாக மூடப்பட்டமை என்பவற்றால் கல்வி செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நடாத்த முடியாமையால் பாடநெறிக் கட்டணத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்ததாக | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 880 | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 04 உத்தியோ | பல்கலைக்கழக முறைமையில் சிறாப்பர் தவிர ஏனைய உத்தியோ கத்தர்களிடமிருந்து நிதிப் பிரமாணம் 880 | நிதிச் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை | இன் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிணை வைப்பு பெறப்படுவதில்லையென | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிறுவகத்தின் கணக்காய்வு அறிக்கையுடன் முன்னைய ஆண்டின் செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக உயர்கல்வி அமைச்சினால் திகதி ஒன்று வழங்கப்பட வில்லையென | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,875,456 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,615,105 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 44,260,351 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பற்கு பாடநெறி கட்டணங்கள் ரூபா 54,815,342 மற்றும் அந்நியச் செலாவணி பரிமாற்றல் இலாபம் ரூபா 7,624,333 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதுளை – கண்டி அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் போது இடம்பெறும் சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,386,200 கொடுப்பனவு செய்த முறை மற்றும் அது முறையாக செலவிடப்பட்டுள்ளதா என பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடுமாறு பொது முயற்சிகள் குழுவினால் பரிந்துரைத்து ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இதுவரை அச்செயற்பாடுகளில் போதிய முன்னேற்றமொன்று தென்படவில்லை | 2021 திசெம்பர் 13 நியமிக்கப்பட்டிருந்த பரிசோதனை குழுவின் பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்படவில்லையென | குறித்த காலப்பகுதியில் முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு பொது முயற்சிகள் குழுவிற்கு அறிக்கையிட வேண்டும் |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டப்பின் படிப்பு, பட்டப்பின் டிப்ளோமா பாடநெறிகளுக்காக 520 மாணவர்களை அனுமதிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் 156 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அது எதிர்பார்த்த அளவில் 30 சதவீதத்தை விட குறைவாக இருந்தது. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக சில பாடநெறிகளுக்காக மாணவர்களின் பதிவு குறைவாக அவதானிக்கப்பட்டதாக | உரிய வழிகாட்டல்களுக்கு இணங்க சயற்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவகத்தினால் நடாத்தப்படும் கலாநிதி பட்டம் (PhD) 10 பாடநெறிக்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 18 மாணவர்கள் பதிவுசெய்திருந்தனர். 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பதிவுசெய்த மாணவர்களின் அளவு படிப்பாடியாக குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது ஒரு மாணவரேனும் பதிவு செய்திருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக சில பாடநெறிக்களுக்காக ஐந்து ஆண்டுகள் முழுவதும் ஒரு மாணவரேனும் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | இலங்கையில் ஆராய்ச்சி பட்டங்களுக்காக நிதி வழங்கும் நிறுவனமான தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய ஆராய்ச்சி நிலையத்தினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கீடு செய்த குறைவடைந்தமையால் இது நிகழ்ந்துள்ளது. | வருடாந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட மாணவர் அளவினை அனுமதிப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறை பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக புலமைப் பரிசில் வசதிகளை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிதியக் கணக்கிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காணப்பட்ட ரூபா 2,083,789 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி நிதியத்தின் மூலம் இதுவரை ரூபா 5,929,600 ஆன 12 ஆராய்ச்சி செயற்திட்டங் களுக்காக வழங்கியுள்ளதாகவும் ரூபா 2,083,789 ஆன மீதி உட்பட 5 மில்லியனுக்கு அண்மித்த ஆராய்ச்சி மானியம் வழங்குவதற்காக தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக | நிதியத்தை வழங்கப்பட்ட செயற்பாடுகளுக்காக செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1,776,855 ஆன 05 ஆராய்ச்சி நிதியங்கள் 2021 திசெம்பர 31 ஆம் திகதி பயன்படுத்தியிருக்க வில்லை | ஆராய்ச்சி செயற்திட்டங்களை திட்டமிடப்பட்ட வகையில் செயற்படுத்தவதற்கு முடியாமல் இருப்பதற்கு நாட்டில் காணப்படும் இரசாயன பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரண பற்றாக்குறையொன்று தாக்கமளித்திருள்ளதாக | - மேற்படி - |